TAMILTH Puducherry 1 Regional_02 224514
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -shanmugam.k@thehindutamil.co.in -

கர்நாடக தேர்வாணைய செயலரின் கார் திருட்டு

சிதம்பரத்தில் சூடானைச் சேர்ந்த இருவர் கைது

■ கடலூர்

கர்நாடக தேர்வாணைய செயலரின் காரை திருடிய தெற்கு சூடான் நாட்டைச் சேர்ந்த 2 பேரை சிதம்பரம் பகுதியில் போலீஸார் கைது செய்துள்ளனர்.

சிதம்பரம் அருகே உள்ள சித்தலப்பாடி கிராமத்தை சேர்ந்தவர் ராமலிங்கம். இவர் கடந்த 22-ம் தேதி நள்ளிரவு தனது வீட்டில் இருந்து வெளியே வந்துள்ளார். அப்போது, அந்தப் பகுதியில் 2 சொகுசு கார்களில் வெளிநாட்டினர் 4 பேர் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

இதை பார்த்த ராமலிங்கம், 'இந்த நேரத்தில் இங்கு ஏன் நிற்கிறீர்கள்?' என்று கேட்டுள்ளார். இதனால் அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது.

பைக் உடைப்பு

இதனால் ஆத்திரமடைந்த அந்த 4 பேரும் ராமலிங்கத்தை தகாத வார்த்தைகளால் ஆங்கிலத்திலேயே திட்டி, ராமலிங்கத்தின் வீட்டில் இருந்த அவரது பைக்கை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். ராமலிங்கம் சத்தம் போட்டதால், அந்த 4 பேரும் 2 சொகுசு கார்களையும் அங்கேயே விட்டுவிட்டு தப்பி ஓடினர்.

இதுகுறித்து அண்ணாமலை நகர் காவல்நிலையத்துக்கு ராமலிங்கம் தகவல் அளித்தார். காவல் ஆய்வாளர் தேவேந்திரன் தலைமையிலான போலீஸார் 2 சொகுசு கார்களையும் கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

கைப்பற்றப்பட்ட 2 சொகுசு கார்களில் ஒன்றான இனோவா கார், கர்நாடக மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளரின் கார் என்பது தெரியவந்தது. கர்நாடக மாநிலத்தில் இருந்து அந்தக் கார் திருடப்பட்டதும் தெரியவந்தது.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், இந்த கார் திருட்டில் தொடர்புடைய அண்ணாமலைநகரில் தங்கியிருந்த தெற்கு சூடான் நாட்டைச் அகஸ்டின் கிராஸ் பிரான்சிஸ் (26), எலியா அமின் எலியா (27) ஆகியோர் சிக்கினர். இதில் அகஸ்டின் கிராஸ் பிரான்சிஸ் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்து முடித்த முன்னாள் மாணவர் ஆவார்.

எலியா அமின் தற்போது அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் எம்.ஏ பொருளாதாரம் படித்து வரும் மாணவர் என்பதும் தெரியவந்துள்ளது. அவர்கள் இருவரையும் கைது செய்த போலீஸார், தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

▲ விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் சி.வி.சண்முகம் மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழுப்புரத்தில் ஜெயலலிதா பிறந்த நாள் கொண்டாட்டம்

● அமைச்சர் சி.வி.சண்முகம் நலத்திட்ட உதவி வழங்கினார்

■ விழுப்புரம்

விழுப்புரம் வடக்கு மாவட்ட அதிமுக மாணவரணி சார்பில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி செயலாளர் சக்திவேல் தலைமை தாங்கினார். நகர செயலாளர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி செயலாளர் பசுபதி, இலக்கிய அணி செயலாளர் திருப்பதி பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கிய அமைச்சர் சிவி சண்முகம் பேசியதாவது:

தமிழக அரசு பிப்ரவரி 24-ம் தேதியை பெண்கள் பாதுகாப்பு தினமாக அறிவித்து கொண்டாடி, கடலூர் மாவட்டத்தில் 9 வயது சிறுமிக்கு ரூ. 1 லட்சம் ரொக்கப் பரிசும், பாராட்டுப்பத்திரமும் வழங்கி கௌரவித்தது.

கடந்த 9 ஆண்டுகளில் அரசு சார்பில் 35 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணணி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 7,000 கோடி செலவிடப்பட்டுள்ளது. உத்தரபிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ் ஓராண்டு மடிக்கணனி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி பின்னர் நிறுத்திவிட்டார். ஆனால் இந்திய அளவில் தொடர்ந்து 9 ஆண்டுகளாக தமிழக அரசு இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர், அரசு பெண்கள் கல்லூரி மாணவி கீர்த்தனா என்பவரின் பேச்சுத்திறமையை பாராட்டி ரூ. 5 ஆயிரம் ரொக்கப்பரிசு வழங்கி கௌரவித்தார். முன்னதாக காணை ஒன்றியம் சார்பில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் 2 ஆயிரம் ஏழை எளியோருக்கு மக்கள் நலத்திட்டங்களையும் அமைச்சர் வழங்கினார்.

திண்டிவனம் அரசு மருத்துவமனையில்

பெண் வயிற்றில் இருந்த 2 கிலோ கட்டி அகற்றம்

■ விழுப்புரம்

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பெண் வயிற்றில் இருந்த 2 கிலோ எடை அளவிலான கட்டியை அகற்றி மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

திண்டிவனம் - சென்னை சாலையில் உள்ள டி.வி நகரில் வசித்து வருபவர் செல்வம். இவரது மனைவி அன்னக்கிளி (45). இவர் அண்மை காலமாக தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். இவர் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஸ்கேன் செய்து பார்த்தனர். அவரது வயிற்றில் 2 கிலோ எடை அளவிலான கட்டி இருந்ததை கண்டுபிடித்தனர். முதன்மை மருத்துவ அலுவலர் சாந்தகுமாரி மற்றும் மருத்துவர்கள் சிந்து, தமிழ்செல்வி தலைமையிலான மருந்துவக் குழுவினர் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். அன்னக்கிளிவயிற்றில் இருந்த பைராய்டு எனப்படும் கட்டியை அகற்றினர். இந்த வகையான அறுவை சிகிச்சை திண்டிவனம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்களால் முதன் முறையாக செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அன்னக்கிளி டாக்டர்கள் மேற்பார்வையில் நல்ல நிலையில் உள்ளார்.

▲ திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பெண்ணில் வயிற்றில் இருந்த 2 கிலோ கட்டியை அகற்றி சாதனை புரிந்த மருத்துவர்கள்.

▲ விழுப்புரம் அருகே வேலைவாய்ப்பு முகாமில் பணி ஆணை பெற்றவர்களுடன் மக்களவை உறுப்பினர் ரவிக்குமார்.

காந்தலவாடியில் வேலைவாய்ப்பு முகாம்

■ விழுப்புரம்

விழுப்புரம் அருகே உள்ளது காந்தலவாடி கிராமம். விழுப்புரம் மக்களவை உறுப்பினர் ரவிக்குமாரால் தத்தெடுக்கப்பட்டுள்ள இக்கிராமத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் நேற்று வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 27 நிறுவனங்கள் பங்கெடுத்தன. 802 பேர் இந்த முகாமில் வேலைக்காக பதிவு செய்து கொண்டனர். அவர்களில் 314 பேர் வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 136 பேருக்கு அங்கேயே பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இம்முகாமிற்கு மக்களவை உறுப்பினர் ரவிக்குமார் தலைமையேற்றார். மகளிர் திட்ட இயக்குநர் ஈஸ்வரன், உதவி திட்ட அலுவலர்கள் மாரீஸ்வரன், சத்தியமூர்த்தி, முத்துப் பாண்டியன், சித்ரா, முனியப்பன், திருவெண்ணைநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேல்மலையனூரில் நாளை தேரோட்டம்

■ விழுப்புரம்.

மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலின் பிரசித்தி பெற்ற மாசி திருத்தேர் விழா கடந்த 22ம் தேதி தொடங்கியது. அன்று இரவு 10 மணிக்கு சக்தி கரக ஊர்வலம் நடந்தது. மறுநாள் மயானகொள்ளை நிகழ்ச்சி நடந்தது

தொடர்ந்து நேற்று மாலை தீமிதி விழா நடைபெற்றது. காப்பு கட்டி விரதமிருந்து வரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்தனர்.மேலும் விழுப்புரம் எஸ் பி ஜெயகுமார் தீ மிதித்து தன் வேண்டுதலை நிறைவேற்றிக்கொண்டார்.

முக்கியவிழாவானதிருத்தேர் வடம் பிடித்தல் நாளை (பிப். 28) நடைபெற உள்ளது. தீ மிதி விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தீ மிதித்தனர். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை தீயணைப்புத்துறையினர், காவல்துறையினர், சுகாதாரத் துறையினர் செய்திருந்தனர். மாசி விழா ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ராமு , அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் செய்துள்ளனர். தேர் திருவிழாவை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாடியில் சமுதாய வளைகாப்பு

■ கடலூர்

குறிஞ்சிப்பாடியில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடந்தது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் வெ.அன்புச்செல்வன் முன்னிலையில் தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி வட்டார பகுதியில் உள்ள கர்ப்பிணிகள் அனைவருக்கும் அமைச்சர், சீர்வரிசை தட்டுகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். அவர் பேசுகையில், " டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் நிதியுதவியை தற்போது ரூ.12 ஆயிரத்திலிருந்து ரூ.18 ஆயிரமாக முதல்வர் பழனிசாமி தலைமையிலான அரசு உயர்த்தி வழங்கி வருகிறது" என்று தெரிவித்தார்.மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் திட்ட அலுவலர் பழனி, மருத்துவ அலுவலர் அகிலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

▲ குறிஞ்சிப்பாடியில் நடந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் தொழில்துறை அமைச்சர் சம்பத் கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை தட்டுகளை வழங்கினார்.

பேருந்து கண்ணாடியை உடைத்தவர் கைது

■ விழுப்புரம்

திண்டிவனம் அருகே பேருந்து கண்ணாடியை உடைத்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

ஆவணிப்பூரில் இருந்து அரசு நகரப்பேருந்து நேற்று முன்தினம் இரவு மீண்டும் திண்டிவனத்திற்கு திரும்பி வந்து கொண்டிருந்தது. ஆட்சிப்பாக்கம் கிராமம் அருகே இளைஞர் ஒருவர் கற்களை வீசி பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்தார். பேருந்தை நிறுத்திய ஓட்டுநர் மற்றும் நடத்துநர் அந்த நபரை பிடித்து ஒலக்கூர் போலீஸில் ஒப்படைத்தனர்.போலீஸார் விசாரணை மேற்கொண்டதில், அவர் சென்னை பாரிமுனையில் வசிக்கும் முனுசாமி மகன் உதயா (26) என்பது தெரியவந்தது. உறவினர் இல்ல நிகழ்ச்சிக்காக வந்தவர் மது போதையில் பேருந்தின் கண்ணாடியை உடைத்தது தெரியவந்தது. உதயாவை போலீஸார் கைது செய்தனர்.

எல்.ஐ.சி. உடன் இணைந்து இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நடத்தும்

'அறிவியல் விநாடி வினா-2020'

சென்னையில் நாளை நடைபெறுகிறது

மாணவர்கள் ரஷ்ய விண்வெளி மையத்துக்கு செல்ல வாய்ப்பு

எல்.ஐ.சி. உடன் இணைந்து இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் வழங்கும் 'அறிவியல் விநாடி வினா – 2020' போட்டி சென்னையில் நாளை நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 6 முதல் 8–ம் வகுப்புப் படிக்கும் மாணவ – மாணவியர் பங்கேற்கலாம்.

இப்போட்டி நாளை (பிப் . 28, வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை ஆழ்வார்பேட்டை கஸ்தூரிரங்கன் சாலையில் உள்ள ரஷ்ய கலாச்சார மையத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள், போட்டி நடைபெறும் இடத்திலேயே ரூ.300 பதிவுக்கட்டணமாகச் செலுத்தி, பங்கேற்கலாம்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பதிவுக் கட்டணம் கிடையாது. இந்தபோட்டியில் வெற்றி பெறும் மாணவ–மாணவியர் ரஷ்ய விண்வெளிமையத்துக்கு அழைத்துச் செல்லப்படவிருக்கிறார்கள். மேலும் விவரங்களுக்கு 9003196509 என்ற செல்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். இந்நிகழ்ச்சியை UNIBIC, AMW VACAY, REPUTE ஆகியவை இணைந்து வழங்குகின்றன.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை

பொதுப்பணித்துறை / கட்டட அமைப்பு இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / ஒப்பந்த முறை : சி படிவம் – இன விலை முறை குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 17 / 2019–20 / கட்டட (க & ப) வட்டம் / திருச்சி / நாள் : 24.2.2020

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பாக கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ததுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்காணும் பணிகளுக்கு குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு உள் மற்றும் வெளிப்புறம் மின் வசதிகள் ஏற்படுத்தும் பணி. பணியின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சங்களில் சரக்கு மற்றும் சேவை வரி 12% உட்பட) : 74.90 முன் வைப்புத் தொகை (ரூபாய்) : 47,500/– ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் : 06.03.2020 ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்க பெறும் காலம் : 27.02.2020 முதல் 05.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை. ஒப்பந்தக் காலம் : 5 மாதங்கள்.

குறிப்பு: (1) ததுதி விவரம் உள்ளிட்ட பிற அனைத்து விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கீழ்க்கண்ட இணையதளத்தில் இலவசமாக தரவிறக்கம்கொள்ளலாம் www.tenders.tn.gov.in. & www.tn.tenders.gov.in 2) மேலும் கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் திருச்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு Rs.15,000/- + GST Rs.1800/- தொகையை செலுத்தியும் நேரில் பெற்றுக்கொள்ளலாம். (3) முன் வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய அலுவலர்: மின்பொறியாளர், பொ.ப.து., மின் கோட்டம், திருச்சி-20. (4) ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்ச ததுதி : பொதுப்பணித்துறையில் வகுப்பு II-ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள். (5) ஒப்பந்தக்காரர் ததுதி குறித்த விவரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவர குறிப்புகள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். (6) ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறவும் அல்லது உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்கவும் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள், ஏதாவது ஒரு காரணத்தினால் அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை அதற்கு அந்த அலுவலக வேலை நாளில் அளிக்கப்படும். அதேபோல் உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியையும் அடுத்த நாள் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். (7) இப்பணிக்கான முன் ததுதி விண்ணப்பம் குறித்து ஏதேனும் விளக்கம் தேவைப்படின் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட(க&ப)வட்டம், கன்டோன்மெண்ட், திருச்சி-1 அலுவலக தொலைபேசி எண்: 04312462604.

செ.ம.தொ.இ/ 1101 /ஒப்பந்தப்புள்ளி/2020

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (க &ப) வட்டம், திருச்சி – 1

நெய்வேலியில் ஓய்வு பெற்ற என்எல்சி ஊழியர்

வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு: கார் சேதம்

■ கடலூர்

நெய்வேலியில் ஓய்வு பெற்ற என்எல்சி ஊழியர் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதில் கார் சேதமடைந்தது.

நெய்வேலி வட்டம் 5-ல் வசித்து வருபவர் ராஜேந்திரன். ஓய்வு பெற்ற என்எல்சி ஊழியர். தொழுசவில் பகுதி செயலாளராக இருந்துள்ளார். இவர் நேற்று முன்தினம் உறவினர் வீட்டு நிகழ்ச்சிக்காக குடும்பத்துடன் சென்னை சென்றுள்ளார்.

நேற்று அதிகாலை அவர் வீட்டின் மீது மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசி உள்ளனர். வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் தீப்பற்றி எரிந்தது. அந்த வழியாகச் சென்ற ஒருவர் இதனை பார்த்து என்எல்சி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற என்எல்சி தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்தனர். இதில் காரின் பின் பக்கம் எரிந்து சேதமடைந்தது.

இது குறித்து தகவல் அறிந்த நெய்வேலி டிஎஸ்பி லோகநாதன் மற்றும் போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைநடத்தினர். இதுதொடர்பாக நெய்வேலி டவுன்ஷிப் போலீஸார் 3 பேரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

▼ வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் தீப்பற்றி எரிந்தது.

▲ குண்டு வீச்சில் சேதமடைந்த கார்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

பெயர் மாற்றம்
புதுச்சேரி -9, தட்டாஞ்சாவடி, கதிர்காமம், ஆனந்தா நகர், நெ.43, மணிமேகலை வீதி விலாசத்தில் வசிக்கும், WILSON J.G. S/o. JOSEPH KANNAN (Late) ஆகிய நான் எனது பெயரை JOSEPH GEORGE WILSON S/o. ISAAC JOSEPH KANNAN (Late), என்று பெயர் மாற்றம் செய்து கொண்டேன்.
---WILSON J.G.

பொது

சுற்றுலா

IRCTC
பாரத் தர்ஷன்
ராமாயண யாத்திரை
நாசிக் - ஹம்பி - சித்ரகூடம் - பக்சார் – வாரணாசி - ரகுநாதபுரம் - சீதாமார்ஹி - ஜனக்புரி (நேபாளம்) - அயோத்தி - நந்திகிராமம் - அலகாபாத் - சிருங்காவேர்புர்
05.03.20 (14 நாட்கள்) Rs.15,990/-
இரயில் பயணம், போக்குவரத்து, உணவு, ஹாலில் தங்கும் வசதி, GST உட்பட
90031 40680
90031 40655 / 714

தொழில்

டீலர்கள் தேவை

SONA BELT 3X3 தினம் ரூ.7,500;
XXX BELT 3X3 தினம் ரூ.7,500
டெலிவரி ஏஜெண்ட். Ct: 8940589268

பொது

சுற்றுலா

6 நாள் ஷீரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 நாள் காசி,கயா-மார்ச் 16,30 அலகாபாத், - ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அவுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி,அயோத்தி-ஏப். 24
16 நாள் நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜுன் 14
14 நாள் நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 நாள் பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 நாள் கேரளா படகு வீடு - மே 18
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 நாள் சிம்லா, குளுமணாலி
14 நாள் காஷ்மீர்-மே 5, 14, 23
16 நாள் பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜுன் 2, 11
9 நாள் இலங்கை | 4 நாள் கோவா
SRINIVASA TOUR, Pondy
9384854652

வருந்துகிறோம்!

இரங்கல்

இறப்பு

கண்ணீர் அஞ்சலி
68 years
திருசெங்காட்டங்குடி
திருமதி கோதை சத்தியமூர்த்தி
26.02.2020 அன்று ஆச்சார்யன் திருவடி அடைந்தார்
நீங்கா அன்புடன்
குடும்பத்தார்: சத்தியமூர்த்தி ஸ்ரீராம் & அஸ்வினி, சுபா & ரகுநாதன்
கை பேசி: 89395 98375

FORM A
Public Announcement
(Under Regulation 6 of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)
FOR THE ATTENTION OF THE CREDITORS OF KAMACHI INDUSTRIES LIMITED

	Relevant Particulars	
1	Name of Corporate Debtor	KAMACHI INDUSTRIES LIMITED (Formerly Kamachi Sponge & Power Corporate Ltd.)
2	Date of incorporation of Corporate Debtor	08/10/2003
3	Authority under which Corporate Debtor is incorporated / registered	Registrar of Companies - Chennai
4	Corporate Identity No. / Limited Liability Identification No. of corporate debtor	U27106TN2003PLC051727
5	Address of the registered office and principal office (if any) of corporate debtor	ABC Trade Centre, Old No.50, (New No. 39), 3rdFloor, Anna Salai,Chennai, Tamil Nadu-600002.
6	Insolvency commencement date in respect of corporate debtor	NCLT order dated 19/02/2020 (Published on NCLT Website on 25/02/2020)
7	Estimated date of closure of insolvency resolution process	17/08/2020
8	Name and registration number of the insolvency professional acting as interim resolution professional	Mr. Vikas Prakash Gupta IP No. IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889
9	Address and e-mail of the interim resolution professional, as registered with the Board	Address:C/o. Dipti Enterprises,55, Nehru Putla, Itwari, Nagpur, Maharashtra-440002. Email : vikas.gupta@bngca.com
10	Address and e-mail to be used for correspondence with the interim resolution professional	Address : New No.37/4,Vasantham II, Main Road, Alwarthiru Nagar Annexe, Chennai, Tamil Nadu-600087. Email : ip.kamachi@gmail.com
11	Last date for submission of claims	10/03/2020
12	Classes of creditors, if any, under clause (b) of sub-section (6A) of section 21, ascertained by the interim resolution professional	Not Applicable
13	Names of Insolvency Professionals identified to act as Authorised Representative of creditors in a class (Three names for each class)	Not Applicable
14	(a) Relevant Forms and (b) Details of authorized representatives are available at :	(a) Relevant Forms available at https : //ibbi.gov.in/home/downloads (b) Not Applicable

Notice is hereby given that the National Company Law Tribunal, Chennai Bench has ordered the commencement of a corporate insolvency resolution process of Kamachi Industries Limited vide NCLT order dated 19/02/2020 published on 25/02/2020.
The creditors of Kamachi Industries Limited are hereby called upon to submit their claims with proof on or before 10/03/2020 to the interim resolution professional at the address mentioned against entry No. 10.
The financial creditors shall submit their claims with proof by electronic means only. All other creditors may submit the claims with proof in person, by post or by electronic means.
Submission of false or misleading proofs of claim shall attract penalties.

Sd/-
Vikas Prakash Gupta
Interim Resolution Professional
IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889

Date : February 27, 2020
Place : Mumbai

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல் மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).